எரேமியா
தீர்க்கதரிசியின்
புஸ்தகம்

வரலாற்றுக் கால கட்டம்

யூதாவின் ஐந்து ராஜாக்களின் ராஜ்யபாரத்தின் போது எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தார்:

- **யோசியா (639-608 பி.சி.) - 31 ஆண்டுகள்**
- **யோவாகாஸ் (608 பி.சி.) - 3 மாதங்கள்**
- **யோயாக்கீம் (608-597 பி.சி.) - 11 ஆண்டுகள்**
- **யோயாக்கீன் (597 பி.சி.) - 3 மாதங்கள்**
- **சிதேக்கியா (597-586 பி.சி.) - 11 ஆண்டுகள்**

Sword of the Spirit

யோசியாவின் 13 வது ஆண்டில் (626 பி.சி.) தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையை உரைக்கத் தொடங்கினார்; 586 பி.சி.யில் தேவாலயம் அழிக்கப்பட்டபோது அவர் யூதேயாவில் தனது ஊழியத்தை முடித்தார். இவ்வாறு, தெற்கு இஸ்ரவேலில் அவரது பணி சுமார் நாற்பது ஆண்டுகள் நீடித்தது. இருப்பினும், எருசலேமின் வீழ்ச்சிக்குப் பிறகும் அவர் அவ்வப்போது தீர்க்கதரிசனம் உரைத்து வந்தார்.

Sword of the Spirit

வெவ்வேறு கால கட்டங்களில் நடந்த நிகழ்வுகள்

627 பி.சி	எரேமியாவின் அழைப்பு,அசீரியாவின் கடைசி ராஜா மரணம்
612 பி.சி	பாபிலோன் நினிவேயைக் கைப்பற்றியது
609 பி.சி	யோசியா மரணம்,பாபிலோனுக்கு விரோதமாக எகிப்து எழும்பியது,பார்வோன் யோவாகாஸை நீக்கி யோயாக்கீமை ராஜாவாக வைத்தான்.(IIஇரா 23: 33,34)
605 பி.சி	எகிப்திய இராணுவம் பாபிலோனின் நேபுகாத்நேச்சரால் விரட்டப்பட்டது
604 பி.சி	யூதா பாபிலோனிய பாத்திரமாக மாறியது
598 பி.சி	யூதா பாபிலோனுக்கு எதிராக எகிப்துடன் நட்பு கொண்டது, பாபிலோன் யூதாவைத் தாக்கிற்று
597 பி.சி	யோயாக்கீம் மரணம், யோயாக்கீன் பாபிலோனுக்கு சிறைப்பிடித்துக் கொண்டு போகப்பட்டான்,(II இரா 24:15)
588 பி.சி	எகிப்திலிருந்த யூதர்களின் அழுத்தத்தால் சிதேக்கியா பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம் பண்ணினான். (II இரா 24:20). நகரம் 18 மாதங்கள் முற்றுகைப் போடப்பட்டிருந்தது. (II இரா 25:1,2,8)
587 பி.சி	• கர்த்தருடைய ஆலயம்,ராஜாவின் அரமனை யாவும் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டது.(II இரா 25:10). • நகரத்தின் மற்ற ஜனங்கள் சிறைகளாகக் கொண்டு போகப்பட்டார்கள். • கெதலியா கொல்லப்பட்டான் .(II இரா 25:25, எரே.41:2) • ஏரேமியா எகிப்துக்கு கூட்டிச் செல்லப்பட்டான் .(எரே.43 :5)

Sword of the Spirit

எரேமியாவின் புஸ்தகத்தின் தொகுப்பு

இப்புஸ்தகம் இஸ்ரவேல் தேசத்தின் இருண்ட நாட்களில் வாழ்ந்துவந்த யூதாவின் மிகப் பெரிய தீர்க்கதரிசிகள் ஒருவரின் சுயசரிதை..



எரேமியாவின் காலங்களில் ஜனங்களின் நிலை

- விசுவாச துரோகம், (எரே 3:10)
- விக்கிரக வழிபாடு,(எரே.11:13)
- திகைத்து திடுக்கிடத்தக்கக் காரியம், (எரே.5:30,31)
- ஒழுக்கக்கேடான செயல்

எரேமியா வரப்போகும் நியாயத்தீர்ப்பை குறித்த தேவனுடைய வார்த்தையை உண்மையாக அறிவிக்க அழைக்கப்படுகிறார். ஆனாலும் தன் தேசத்தின் மூப்பர்களாலும் ,தீர்க்கதரிசிகளாலும், கடுமையான துக்கங்களை அனுபவிக்கிறார்;
எதிர்ப்பு, அடிக்கப்படுதல், தனிமைப்படுத்தப்படுதல், சிறைவாசம். ...ஆனாலும் நிராகரிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டாலும், தீர்க்கதரிசனங்கள் பல நிறைவேறுவதைக் காண்கிறார்..
பாபிலோனிய இராணுவம் தேசத்தின் மேல் வருகை; கர்த்தரின் பழிவாங்குதல், ... ஆகியன தீர்க்கதரிசியின் இருதயத்தை உடைத்தாலும் கர்த்தருடைய பரிசுத்தமும் நீதியும் நிரூபிக்கப்படுகின்றன.

Sword of the Spirit

தேசங்களுக்காக ஒரு தீர்க்கதரிசியின் நியமனம்

- ❖ எரேமியாவின் அழைப்பு எரே. 1
- ❖ யூதர்களுக்கான தீர்க்கதரிசனங்கள் எரே.2 - எரே.44
- ❖ புறஜாதியாருக்கான தீர்க்க தரிசனங்கள் எரே 45 - எரே.51
- ❖ எருசலேமின் வீழ்ச்சி எரே. 52

இந்த புத்தகம் எரேமியாவை தேசங்களுக்கு ஒரு தீர்க்கதரிசியாக அழைப்பதில் தொடங்கி (1-10) .இது தேசங்கள் மீதான நியாயத்தீர்ப்புடன் முடிவடைந்து (46-51)புஸ்தகத்தின் முதல் அதிகாரத்தில் கர்த்தர் கொடுக்கிற வாக்குதத்தத்தை உறுதிப்படுத்துகிறது.

Sword of the Spirit

கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வார்த்தைகள்

Sword of the Spirit

எரேமியாவின் அழைப்பு

- ❖ எரேமியா - பொருள் - (தேவன் உயர்ந்தவர்)
- ❖ பென்யமீன் தேசம்
- ❖ ஆனதோத் ஊர்
- ❖ இல்க்கியாவின் (ஆசாரியன்) குமாரன்

யூதாவின் ராஜாவாகிய யோசியாவின் 13 ஆம் வருஷத்தில்
கர்த்தருடைய வார்த்தை :-

எரே.1:5 நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி ,உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்.
எரே.1:6 நான் பேச அறியேன் சிறு பிள்ளையாயிருக்கிறேன்.
எரே.1:9 கர்த்தர் தமது கரத்தை நீட்டி ,வாயைத் தொட்டு.இதோ என் வார்ததைகளை உன் வாயிலே வைக்கிறேன்.
எரே.1:11-16 . .. நீ காண்கிறது என்ன ??

- வாதுமை மரத்தின் கிளை - என் வார்த்தையை திவீரமாய் நடத்துவேன்
- பொங்குகிற பானை, வாய் வடக்கேயிருந்து - வடதிசை ராஜ்யங்கள் தங்கள் சிங்காசனத்தை யூதா தேசத்துக்கு விரோதமாக வைப்பார்கள்.

எரேமியாவுக்கு வாக்குத்தத்தம் :: எரே.1:18 நான் உன்னை இன்றையத்தினம் அரணிப்பான பட்டணமும் , இருப்புத்தூணும்,வெண்கல அலங்கமும் ஆக்கினேன்....உன்னை இர்ட்சிக்கும்படி நான் உன்னுடனே இருக்கிறென்.

Sword of the Spirit

யோசியாவின் காலத்தில் கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வார்த்தைகள் (எரே.)

(22,35,25,26,36,45,46-49)



Sword of the Spirit

யோசியா - இவனை போலொத்த ராஜா இவனுக்குமுன் இருந்ததுமில்லை, இவனுக்குப்பின் எழும்பினதுமில்லை - (II இரா 22 - II இரா23:1-28)

யூதாவுக்கான தீர்க்கதரிசனங்கள்

தரிசன வார்த்தை 1 : (எரே. 2 - எரே. 3:5)

- எருசலேம் நீ என்னை பின்பற்றி வந்த உன் இள வயதின் பக்தியையும்,நீ வாழ்க்கைப்பட்டபோது உனக்கிருந்த நேசத்தையும் நினைத்திருக்கிறேன்.(2:2)

யூதாவின் பாவம் :

- தேவர்களல்லாதவர்களை தேவர்களாக மாற்றி வீணானவைகளைப் பின்பற்றினார்கள் ..(எரே.2:7,8,11,13,20,25,27,29,33,34)

Sword of the Spirit

யூதாவைக்குறித்தான கர்த்தரின் அங்கலாய்ப்பு :

- ❑ என்னிடத்தில் என்ன அனியாயத்தைக் கண்டார்கள்?? (ஏரே.2:6,17,18,21,31,32)

எச்சரிக்கை:

- ❑ உணர்ந்து கொள் (எரே.2:19,22,23)(எரே.,3:1,4,5)

நியாயத்தீர்ப்பு :

- ❑ வழக்காடுவேன் (எரே.2:9,30,35,36,37)

Sword of the Spirit

தரிசன வார்த்தை 2 : (எரே. 3:6 - எரே.6)

இஸ்ரவேல் மற்றும் யூதா கர்த்தரின் பார்வையில் ::
சீர்கெட்ட இஸ்ரவேல் , சீர்கெட்ட பிள்ளைகள்,துரோகி, யூதா - கள்ளத்தனமாய்த் திரும்பினவள் (3:6-8,10,11-14,20,22),மதியற்றவர்கள்,பைத்தியமுள்ளப் பிள்ளைகள்(4:22),அறிவில்லாத ஜனங்கள் (5:21), முரட்டாட்டமும்,கலகமுமான இருதயமுள்ளவர்கள் (5:23),பொருளாசைக்காரர்,பொய்யர் (6:13), தள்ளுபடியான வெள்ளி (6:30)

தேசத்தின் பாவங்கள் ::

- தெய்வம் அல்லாதவைகள் பேரில் ஆணை(விக்கிரக ஆராதனை)(5:7)
- திகைத்துத் திடுக்கிடத்தக்க காரியம். - கள்ளத்தீர்க்கதரிசனம்.(5:30,31)
- துன்மார்க்கர்(5:26,28)

Sword of the Spirit

கர்த்தர் தம் ஜனத்திற்கு எச்சரிக்கையோடு அளிக்கும் கிருபை ::

- ❑ என் சத்தத்துக்குச் செவிகொடாமற் போனதை ஒத்துக்கொள். (3:13)
- ❑ என்னிடத்திற்குத் திரும்பி வா. (3:7)
- ❑ உன் இருதயத்தைப் பொல்லாப்பறக் கழுவு. (4:14)
- ❑ உங்கள் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப்போடுங்கள். (4:4)
- ❑ நல்ல வழி எங்கே என்று பார்த்து ,அதிலே நடவுங்கள்(6:16)

கர்த்தரின் நீதி சரிகெட்டுதல் ::

- ❑ வடக்கேயிருந்து இஸ்ரவேலுக்கு விரோதமாக ராஜ்யங்கள்(4:7,11,12,13)(5:15-17)(6:12)(6:22,23,26)

★ **5:22 எனக்கு பயப்படாதிருப்பீர்களோ?....எனக்கு முன்பாக அதிராதிருப்பீர்களோ??**

Sword of the Spirit

தரிசன வார்த்தை 3 : (எரே.7 -எரே.10) (கர்த்தருக்குப் பிரியமில்லாத ஆராதனை)

கர்த்தரின் பார்வையில் அவருடைய ஜனம்:

- விபசாரர், துரோகிகளின் கூட்டம்(9:2)
- மிருககுணமும்,மதியீனமுமுள்ளவர்கள்(10:8)
- இருதயத்தில் விருத்தசேதனமில்லாதவர்கள்(9:26)

தேசத்தின் பாவங்கள் ::

- பொய் வார்த்தைகளை நம்புகிறீர்கள்.(7:8)(8:11)
- கபடத்தை உறுதியாய் பிடித்திருக்கிறார்கள்(8:5,9:6)
- கர்த்தருடைய சத்தத்திற்கு செவி கொடாமல் இருதய கடினத்தின்படி நடந்தார்கள்(7:24)(9:14)
- துணிகரமாக அருவருப்புகளை எல்லாம் செய்து, அவருடைய நாமம் தரிக்கப்பட்ட ஆலயத்தை தீட்டு படுத்தினார்கள்(7:10,11,30)
- அன்னிய தேவர்கள், தோப்பேத்தின் மேடைகள் (7:18,19)

கர்த்தரின் அங்கலாய்ப்பு ::

- ❑ நீ இந்த ஜனத்துக்காக விண்ணப்பம் செய்ய வேண்டாம்.அவர்கள் செய்கிறதை நீ காணவில்லையா? (7:16,17)
- ❑ என் ஜனங்களோ கர்த்தரின் நியாயத்தை அறியார்கள் (8:7)
- ❑ என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களை மேற்பூச்சாக குணமாக்குகிறார்கள்(8:11)
- ❑ ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தம் அடையாமற் போனாள்?(8:21,22)

Sword of the Spirit

………………

கர்த்தர் தம் ஜனத்திற்கு எச்சரிக்கையோடு அளிக்கும் கிருபை ::

- ❑ உங்கள் வழிகளையும் உங்கள் கிரியைகளையும் சீர்படுத்துங்கள்,அப்பொழுது உங்கள் ஸ்தலத்தில் உங்களை குடியிருக்க பண்ணுவேன்(7:3,5,7)
- ❑ என் வாக்குக்குச் செவிகொடுங்கள்.நான் உங்கள் தேவனாயிருப்பேன் . நீங்கள் என் ஜனமாய் இருப்பீர்கள் (7:23)

கர்த்தரின் நீதி சரிகெட்டுதல் ::

- ❑ என் நாமம் தரிக்கப்பட்டதும் நீங்கள் நம்பிக்கை கொண்டிருப்பதுமான இந்த ஆலயத்துக்கும் உங்களுக்கும் நான் கொடுத்த ஸ்தலத்துக்கும், நான் சீலோவுக்கு செய்ததுபோல செய்வேன்(7 :14)(9:9)
- ❑ என் முகத்தை விட்டு தள்ளிப் போடுவேன்(7:15)(9:16)(8:10)
- ❑ விக்கிரகங்கள் விசாரிக்கப்படும் நாளிலே அழியும்(10:15)

- ★ **கர்த்தரோ மெய்யான தெய்வம் அவர் ஜீவனுள்ள தேவன் நித்திய ராஜா அவருடைய கோபத்தினால் பூமி அதிரும். அவரது உக்கிரத்தைத் ஜாதிகள் சகிக்க மாட்டார்கள்.(10:10)**
- ★ **அவர் சர்வத்தையும் உருவாக்கினவர். … சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்(10:16)**

ஜாதிகளின் ராஜாவே உமக்கு பயப்படாதிருப்பவன் யார்?(10:7)

Sword of the Spirit

தரிசன வார்த்தை 4: (எரே.11- எரே.12) (உடன்படிக்கையை மீறின இஸ்ரவேல் & யூதா)

யூதாவின் பாவங்கள் ::

- பட்டணங்களின் இலக்கமும், தேவர்களின் இலக்கமும் சரி(11:13) (11:17)
- கர்த்தருடைய வார்த்தையைக் கேளாமலும் தங்கள் செவியைச் சாயலும் அவரவர் தம்தம் பொல்லாத இருதய கடினத்தின்படி நடந்தார்கள்(11:8)

கர்த்தரின் அங்கலாய்ப்பு ::

- ❑ துர்ச்சனரோடு மகா தீவினை செய்யும்போது என் பிரியமானவளுக்கு என் வீட்டில் என்ன இருக்கிறது?(11:15)
- ❑ என் ஆத்துமா நேசித்தவனை அவனுடைய சத்துருவின் கையிலே ஒப்புக்கொடுத்தேன்(12:7-11)

கர்த்தர் தம் ஜனத்திற்கு எச்சரிக்கையோடு அளிக்கும் கிருபை ::

- ❑ என் சத்தத்தைக் கேட்டு நான் உங்களுக்குக் கற்பிக்கிறபடியே எல்லாக் காரியங்களையும் செய்யுங்கள். அப்பொழுது நீங்கள் என் ஜனமாய் இருப்பீர்கள். நான் உங்கள் தேவனாயிருப்பேன் (11:3)
- ❑ அவருடைய வழிகளை நன்றாய் கற்றுக்கொண்டால்...அவருடைய ஜனத்தின் நடுவிலே ஊன்றக் கட்டப்படுவார்கள் .(யூதாவின் அயலார்).(12:16)

கர்த்தரின் நீதி சரிகெட்டுதல் ::

- ❑ கர்த்தருடைய பட்டயம்(12:12)
- ❑ தப்பித்துக் கொள்ள மாட்டாதத் தீங்கை அவர்கள் மேல் வரப்பண்ணுவேன்(11:11)

எரேமியாவின் விண்ணப்பம்:(11:20)(12:1-4)
விண்ணப்பத்திற்கு பதில் (11:22,23)(12:5-17)

Sword of the Spirit

தரிசன வார்த்தை 5 : (எரே . 13)

2 காரியங்கள் ::

1. **சணற்கச்சை(1-11)**

- இஸ்ரவேல் மற்றும் யூதா குடும்பத்தார் கர்த்தருடன் கொண்டிருந்த உறவை குறிக்கிறது .[எனக்கு ஜனங்களாகவும் கீர்த்தியாகவும் துதியாகவும் மகிமையாகவும் சேர்க்கையாக்கிக் கொண்டேன்(13:11)].
- அநேக நாள் கழித்து அதை தோண்டி எடுத்த போது அது கெட்டுப் போயிருந்தது அதைப்போல இஸ்ரவேல் மற்றும் யூதா கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடாமல் போனதினால் அவர்களுடைய பெருமையை கர்த்தர் கெட்டுப்போக பண்ணுவார்.

2. **திராட்சை ரசத்தினால் நிரப்பப்பட போகிற சகல ஜாடிகள்(13:12)**
தேசத்தின் குடிகள் எல்லாரும்(சகல ஜாடிகள்) ஒருவர் மேல் ஒருவர் மோதி விழுபடும்படியாக வெறியினால் நிரப்பப் போகிறார் (திராட்சரசம்)

Sword of the Spirit

தேசத்தின் பாவங்கள்::

- திரளான அக்கிரமம் (13:22)
- கர்த்தரை மறந்து பொய்யை நம்புதல்(13:25)
- தேசத்தின் அருவருப்பாகிய விபச்சாரம் , வேசித்தனம்(13:27)

எச்சரிக்கை ::

❑ செவி கொடுத்து கேளுங்கள் .மேட்டிமையாய் இராதேயுங்கள். அவர் அந்தகாரத்தை வரப்பண்ணுவதற்கு முன்னும்..... உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு மகிமை செலுத்துங்கள்.(13:15,16)

நீதி சரிகட்டுதல்::

❑ நான் அவர்களை அழிப்பதேயன்றி மன்னிப்பதுமில்லை , தப்ப விடுவதுமில்லை, இரங்குவதுமில்லை(13:14)

Sword of the Spirit

தரிசன வார்த்தை 6 : (எரே.14 & 15) (மழைத்தாழ்ச்சி)

எரேமியாவின் வேண்டுதல் 1:(14:7-10)

- உம்முடைய நாமம் எங்களுக்குத் தரிக்கப்பட்டுமிருக்கிறதே;எங்களை விட்டுப் போகாதிரும்.(14:9)

கர்த்தரின் பதில் (14:11-12)

❑ நான் அவர்கள் மேல் பிரியமாயிருப்பதில்லை;பட்டயத்தினாலும்,பஞ்சத்தினாலும்,கொள்ளை நோயினாலும்னான் அவர்களை நிர்மூலமாக்குவேன்.(14:12)

வேண்டுதல் 2:(14:13)

- பொய் தீர்க்கதரிகள் கூறும் சமாதானத்தைக் குறித்து

கர்த்தரின் பதில் (14:14-17)

❑ பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் சாவார்கள் (14:15)

வேண்டுதல் 3:(14:19-22)

Sword of the Spirit

- உம்முடைய நாமத்தினிமித்தம் எங்களை அருவருக்காதிரும் (14:21)

கர்த்தரின் பதில் (15:1-14)

❑ மோசேயும்,சாமுவேலும் என் முகத்துக்கு முன்பாக நின்றாலும் , என் மனம் இந்த ஜனங்கள் பட்சமாய் சாராது.(15:1)
❑ 4 விதமான வாதைகளை அவர்கள் மேல் வரக் கட்டளையிடுவேன்.(15:3)
❑ மனாசே எருசலேமில் செய்தவைகளினிமித்தம் அவர்களை பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலையப்பண்ணுவேன்.(15:4)
❑ நான் பொறுத்து பொறுத்து இளைத்துப் போனேன்(15:6)

★ **மீதியாயிருப்பவர்களுக்கு கர்த்தரின் கிருபை** (15:11-14)

வேண்டுதல் 4:(15:15-18)

- நான் உம்முடைய நிமித்தம் நிந்தையை சகிக்கிறேன் என்று அறியும்.(15:15)

கர்த்தரின் பதில் :(15:19-21)

❑ உன்னை இரட்சிப்பதற்காகவும் ,உன்னைத் தப்புவிப்பதற்காகவும் ,நான் உன்னுடனே இருக்கிறேன்.(15:20)

Sword of the Spirit

தரிசன வார்த்தை 7 : (எரே . 16-17)
நீ பெண்ணை விவாகம் பண்ணவேண்டாம் (16:2)

தேசத்தின் பாவம் ::
- சொல்லைக் கேளாதபடி பொல்லாத இருதயக் கடினம் (16:12)

கர்த்தரின் கோபம் ::
- மகா கொடிய வியாதிகளால் சாவார்கள்.பெரியோரும் ,சிறியோரும் சாவார்கள்(16:4,6)
- அவர்களுடைய அக்கிரமத்துக்கும்,அவர்களுடைய பாவத்துக்கும் இரட்டிப்பாய் நீதியை சரிகட்டுவேன்(16:18)
- மகிழ்ச்சியின் சத்தத்தை ஓயப்பண்ணுவேன்(16:9)
- சூறையிடுவிப்பேன்.(17:3)

கர்த்தர் தம் ஜனத்திற்கு எச்சரிக்கையோடு அளிக்கும் கிருபை ::

Sword of the Spirit

- பொய்யையும்,மாயையையும் கைப்பற்றினதை உணரும்போது ,என் கரத்தையும்,என் பெலத்தையும் அவர்களுக்குத் தெரியப்பண்ணுவேன்.என் நாமம் யேகோவா என்று அறிந்துகொள்வார்கள்(16:19,21)
- ஓய்வு நாளைப் பரிசுத்தமாக்கும்படிக்கு ,என் சொல்லைக் கேட்பீர்களானால்-... நகரத்தின் வாசல்களுக்குள் பிரவேசிப்பார்கள்.(17:24,25)

  - மனுஷன் மேல் நம்பிக்கை வைத்து கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன்.(17:5)
  - உம்மைவிட்டு அகன்று போகிறவர்களின் பெயர் புழுதியில் எழுதப்படும்(17:13)

★ **இருதயத்தை ஆராய்கிறவர்,உள்ளிந்திரியங்களையும் சோதித்தறிகிறவர்(17:10)**
★ **கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து,கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்** (17:7)

Sword of the Spirit

தரிசன வார்த்தை 8: (எரே 18 - 20)

குயவன் வீட்டிற்குப் போ(18:1)

தேசத்தின் பாவம்::

- கர்த்தரை மறந்து,மாயையான விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டுகிறார்கள்(18:15)(19:4)

எச்சரிக்கை::

- உங்களுக்கு விரோதமாக ஒரு காரியத்தை யோசிக்கிறேன். ஒவ்வொருவரும் தன்தன் பொல்லாத வழியை விட்டுத்திரும்பி ,உங்கள் வழிகளையும்,உங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்துங்கள்(18:11)

நீதி சரிக்கட்டுதல் ::

- ஆபத்தின் நாளிலே என் முகத்தையல்ல,என் முதுகை அவர்களுக்குக் காட்டுவேன்.(18:17)
- தோப்பேத்,இன்னோம் பள்ளத்தாக்கு --சங்கார பள்ளத்தாக்கு ,இந்த ஜனத்தையும்,இந்த நகரத்தையும் உடைத்துப் போடுவேன்(19:6-15)

எரேமியாவின் விண்ணப்பம்(18:19-23)(20:7-18)

- நீர் என்னை கவனித்து என்னோடே வழக்காடுகிறவர்களின் சத்தத்தைக் கேளும்.(18:19)
- என் காரியத்தை உம்மிடத்தில் சாட்டிவிட்டேன்.(20:12)

பிரதான விசாரணை கர்த்தன் - **பஸ்கூர்**(மாகோர் மீசாபீப்)(கள்ளத்தீக்கதரிசி) (மல்கியாவின் குமாரன்) எரேமியாவை அடித்து காவலறையிலே போட்டான்.

கர்த்தர் பஸ்கூருக்கு விரோதமாக ::
நீயும் உன் கள்ளத்தீர்க்கதரிசனத்துக்குச் செவிகொடுத்த யாவரும் பாபிலோனுக்குப் போய் அங்கே மரித்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவீர்கள் (20:1-8)

Sword of the Spirit

எரேமியாவின் தீர்க்கதரிசன புஸ்தகத்தை கால வரிசைப்படி வாசிக்க வேண்டும்



யோயாக்கீமின் 4 & 5ஆம் வருடம்

22	யோயாக்கீமின் கடைசி நாட்கள் குறித்து கர்த்தருடைய வார்த்தை
35	ரேகாபியர்
25 26	யூதா 70 வருஷம் பாபிலோனுக்கு கீழ் எரேமியாவுக்கு விரோதமாய் ஜனங்கள்
36 45	கர்த்தருடைய வார்த்தைகள் எழுதப்பட்ட சுருளை யோயாக்கீம் அக்கினியில் எரிந்துப்போட்டான் பாரூக்
46 47 48 49	புறஜாதியருக்கான தீர்க்கதரிசனங்கள் எகிப்து, பெலிஸ்தியா, மோவாப், அம்மோன், ஏதோம், தமஸ்கு, கேதார்,காத்சோர்

சிதேக்கியாவின் 4ஆம் வருஷம்

23 24	ஜனங்களைச் சிதறடிக்கிற மேய்ப்பர்கள்,பொய்த் தீர்க்கதரிசிகள் அத்திப் பழங்களுள்ள இரண்டு கூடைகள்
27 28	பாபிலோன் ராஜாவின் நுகம் அனனியா - பொய்த்தீர்க்கதரிசனம்
29	கர்த்தருடைய வார்த்தை சிறைப்பட்டுப் போனவர்களுக்கு ஒரு நிரூபமாக
30 31	யாக்கோபு இக்கட்டுக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான் புது உடன்படிக்கை
49 50 51	ஏலாமுக்கும்,பாபிலோனுக்கும் விரோதமாக கர்த்தரின் வார்த்தை செராயா எரேமியாவின் சொற்படி புஸ்தகத்தை ஐப்பிராத்து நதியில் போட்டான்

சிதேக்கியாவின் 9-11 வருஷங்கள்

37	பார்வோன் வருகிறதை அறிந்த கல்தேயர் ,எருசலேமை விட்டு நீங்கி போனார்கள்
34	கர்த்தருடைய உடன்படிக்கையை மீறுதல்
37	ஏரேமியா காவற்படுத்தப்பட்டான்
21 32 33	கர்த்தர் :- ஜீவ வழி,மரண வழி உவமை - ஆனதோத்திலுள்ள நிலம் எரேமியா காவலிலிருக்கும்போது 2 ஆம் தரம் கர்த்தரின் வார்த்தை
38	ஏரேமியாவின் மேல் குற்றச்சாட்டு,எத்தியோப்பியன் எபெத்மெலேக், சிதேக்கியாவுக்கு கொடுக்கப்படும் எச்சரிக்கை

முற்றுகைக்குப் பின்

39	நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவை பாபிலோனுக்கு கொண்டு போனான்.
40	பாபிலோன் ராஜா கெதலியாவை தேசத்தின் மேல் அதிகாரியாக்கினான்.
41	கெதலியா கொல்லப்பட்டான் .இஸ்மவேல் // யோகனான்
42	கர்த்தர் : - எகிப்துக்குப் போகாதிருங்கள்
43	எகிப்துக்குப் போனார்கள்
44	கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்ய துணிகரம்
52	சிதேக்கியாவின் மரணம், யோயாக்கீனின் உயர்வு

யோயாக்கீமின் காலத்தில் கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வார்த்தைகள்

(எரே.)

(22,35,25,26,36,45,46-49)

Sword of the Spirit

யோயாக்கீம் - கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்
(II இரா. 23:34-37), (எரே. 36 :1-25), (எரே. 26 : 20-23)

Sword of the Spirit

யோயாக்கீமின் நான்காம் மற்றும் ஐந்தாம் வருடம்

22	யோயாக்கீமின் கடைசி நாட்கள் குறித்து கர்த்தருடைய வார்த்தை
35	ரேகாபியர்
25	யூதா 70 வருஷம் பாபிலோனுக்கு கீழ்
26	எரேமியாவுக்கு விரோதமாய் ஜனங்கள்
36	கர்த்தருடைய வார்த்தைகள் எழுதப்பட்ட சுருளை யோயாக்கீம் அக்கினியில் எறிந்துப்போட்டான்
45	பாரூக்
46 47 48 49	புறஜாதியருக்கான தீர்க்கதரிசனங்கள் எகிப்து, பெலிஸ்தியா, மோவாப், அம்மோன், ஏதோம் , தமஸ்கு, கேதார், காத்சோர்

Word of the Spirit

22, 35

22 :: யோயாக்கீம் (சல்லூம்)

கர்த்தருடைய வார்த்தை யூதாவின் ராஜாவிற்கும், ஜனங்களுக்கும்:(3)

- நியாயமும் நீதியும் செய்யுங்கள்
- பறிகொடுத்தவனை ஒடுக்குகிறவனுடைய கைக்குத் தப்புவியுங்கள்
- பரதேசி,திக்கற்றவன்,விதவை - ஒடுக்காமல்,கொடுமை செய்யாமல் இருங்கள்
- குற்றமில்லாத இரத்தத்தை சிந்தாமல் இருங்கள்.

வார்த்தையின்படி செய்வீர்களாயில் -- அரமனை வாசல்களின் வழியாய் உட்பிரவேசிப்பீர்கள்
கேளாமற்போனீர்களாகில் -- அரமனை பாழாய்ப்போம்.(5-10)

சல்லூமுக்கு கர்த்தருடைய வார்த்தை:(11-23)

- ❑ நீ கேதுரு மாளிகைகளில் உலாவுகிறதினாலே ராஜாவாயிருப்பாயோ?(15)
- ❑ உன் சிறு வயது முதல் நீ என் சத்தத்தைக் கேளாமற் போகிறதே உன் வழக்கம்.(21)
- ❑ என் வலது கையின் முத்திரை மோதிரம் - கோனியா (யோயாக்கீன்)(24)
- ❑ அவன் வித்தில் ஒருவனாகிலும் வாழ்வடைந்து ,தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து,யூதாவில் அரசாளப்போகிறதில்லை(30)

35 :: ரேகாபியர்

கர்த்தர்::

- ❑ யோனதாப் தன் புத்திரருக்குக்(ரேகாபியர்) கட்டளையிட்ட வார்த்தைகள் கைக்கொள்ளப்பட்டு வருகிறது, யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் எனக்கு கீழ்ப்படியாமற்போனீர்கள்.(14)
- ❑ **கீழ்ப்படிதலினால் ரேகாபியருக்கு ஆசீர்வாதம்** :

எனகளு முன்பாக நிற்கத்தக்க புருஷன் யோனதாபுக்கு இல்லாமற்போவதில்லை.(19)

Sword of the Spirit

25 , 26

25 :: யூதா 70 வருஷம் பாபிலோனுக்கு கீழ்

யூதாவின் ஜனத்திற்கு கர்த்தரின் வார்த்தை

- நான் உங்களுக்கு தீமை செய்யாதபடிக்கு உங்கள் கைகளின் செய்கைகளால் எனக்கு கோபம் உண்டாக்காமல் இருங்கள் என்று சொல்லி அனுப்பியும் என் சொல்லைக் கேளாமல் போனீர்கள் (25:6,7)
- தேசமெல்லாம் வனாந்திரமும் பாழும் ஆகும் இந்த ஜாதிகள் 70 வருஷமாக பாபிலோன் ராஜாவை சேவிப்பார்கள்.(25:11)
- நான் அவர்களுக்கு அவர்கள் கிரியைகளுக்கு தக்கதாகவும் அவர்கள் கைகளில் செய்கைகளுக்கு தக்கதாகவும் பதிலளிப்பேன்(25:14)

(உக்கிரமாகிய மதுபானத்தின் பாத்திரத்தை நீ என் கையிலிருந்து வாங்கி ஜாதிகள் எல்லாருக்கும் அதிலே குடிக்க கொடு(25:14,16))

26 :: எரேமியாவுக்கு விரோதமாய் ஜனங்கள் ::

எரேமியாவை கொல்ல ஜனங்களின் கையில் ஒப்புக்கொடாதபடி **அகீக்காம்** அவனுக்கு சகாயமாயிருந்தான்(24)

Sword of the Spirit

எரேமியா// இயேசு

26:1,2	ஆலயத்தின் பிரகாரத்தில் நின்று கர்த்தருடைய வார்த்தை	மத் 21:23
26:6	இந்த ஆலயத்தை சீலோவைப் போலாக்கி...	மத் 24:2
26:8	நீ சாகவே சாகவேண்டும்	மத் 27:23
26:9	விரோதமாய் கூடினார்கள்	மத் 26:57,59
26:11	இந்த மனுஷன் மரண ஆக்கினைக்கு பாத்திரன் இந்த நகரத்துக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொன்னானே	மத் 26:65,66
26:12	இந்த ஆலயத்துக்கும் இந்த நகரத்துக்கும் விரோதமாக தீர்க்கதரிசனமாக சொல்ல கர்த்தர் என்னை அனுப்பினார்	லூக் 22:68-70
26:14	இதோ உங்கள் கையில் இருக்கிறேன். உங்கள் பார்வைக்கு நன்மையும், நியாயமாய் இருக்கிறதை எனக்கு செய்யுங்கள்	லூக் 22:53

Sword of the Spirit

36 , 45

36 :: யோயாக்கீம் கர்த்தருடைய வார்த்தைகள் எழுதப்பட்ட சுருளை அக்கினியில் எறிந்துப் போட்டான்

- கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்ல , பாரூக் அதை எழுதி கர்த்தருடைய ஆலயத்தில் உபவாச நாளிலே ஜனங்களுடைய செவிகள் கேட்கவும், யூதா கோத்திரத்தாரும் கேட்கும்படி அவைகளை வாசித்தான்.(8)
- சம்பிரதி - கெமரியாவின் அறையில் வாசித்தான்.
- கெமரியாவின் மகன் மிகாயா இதை பிரபுக்களிடம் தெரிவித்தான்(13)
- யெகுதி அந்த சுருளை யோயாக்கீமுக்கு வாசித்தான்.ராஜா சுருளனைத்தும் வெந்து போகும்படி அக்கினியில் எறிந்தான்.(23)
- பாரூக்கையும்,எரேமியாவையும் பிடிக்க ராஜா உத்தரவு.அனால் கர்த்தர் அவர்களை மறைத்தார்.(26)

யோயாக்கீமுக்கு கர்த்தரின் வார்த்தை ::

- பாபிலோன் ராஜா நிச்சயமாய் வருவான் (29)
- தாவீதின் சிங்காசனத்தின் மேல் உட்காரும்படி யோயாக்கீமின் வம்சத்தில் ஒருவனும் இரான்.(30)
- கர்த்தர் சொன்னபடி எரேமியா இன்னொரு சுருளை பாரூக்கிடம் கொடுத்து எழுத வைத்தான்.(32)

45:: பாரூக்கைக் குறித்து கர்த்தருடைய வார்த்தை

- நான் கட்டினதையே நான் இடிக்கிறேன்;நான் நாட்டினதையே நான் பிடுங்குகிறேன்.இந்த முழுத்தேசத்துக்கும் இப்படியே நடக்கும்.(4)
- நீ போகும் சகல ஸ்தலங்களிலும், உன் பிராணனை உனக்குக் கிடைக்கும் கொள்ளைப் பொருளாகத் தருகிறேன்.(5)

Sword of the Spirit

46 - 49

46 :: எகிப்தைக்குறித்தும்,எகிப்து ராஜாவின் ராணுவத்தைக்குறித்தும்(2)

- ❑ எகிப்து தேசத்தை அழிக்கப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்னேச்சார் வருவான் (13)
- ❑ எகிப்தையும்,அதின் ராஜாக்களையும், பார்வோனையும்,அவனை நம்பியிருக்கிறவர்களையும் விசாரித்து, அவர்களை ஒப்புக்கொடுப்பேன்;அதற்குப்பின்பு அது பூர்வகாலத்தில் இருந்ததுப்போல் குடியேற்றப்படும்.(25,26)

47 :: பெலிஸ்தருக்கு விரோதமாய்க் கர்த்தருடைய வசனம்(1)

Sword of the Spirit

- ❑ பெலிஸ்தரையெல்லாம் பாழாக்கவும்,தீருவுக்கும் , சீதோனுக்கும் மீதியான சகாயரையெல்லாம் சங்காரம் பண்ணவும்வருகிற நாளிலே இப்படியாகும்.(4)

48 :: மோவாபைக் குறித்து கர்த்தர் சொல்லுகிறது (1)

- ❑ பாழாக்குகிறவன் எல்லாப் பட்டணங்களின் மேலும் வருவான்;ஒரு பட்டணமும் தப்பிப்போவதில்லை(8)
- ❑ மோவாப் தேசத்திலே தூரத்திலும், சமீபத்திலுமிருக்கிற எல்லாப் பட்டணங்களின் மேலும் , நியாயத்தீர்ப்பு வரும்.(24)
- ❑ ஒருவரும் விரும்பப்படாத பாத்திரம்போல மோவாபை உடைத்துப் போடுவேன். (38)
- ❑ மோவாப் கர்த்தருக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டினபடியால் , அது ஒரு ஜனமாயிராதபடிக்கு அழிக்கப்படும்.(42)
- ❑ ஆனாலும் கடைசி நாட்களில் மோவாபின் சிறையிருப்பைத் திருப்புவேன்.(47)

Sword of the Spirit

49:(1-33) :: அம்மோன் புத்திரரைக் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது (1)

- உன் சுற்றுப்புறத்தார் எல்லாராலும் உன்மேல் திகிலை வரப் பண்ணுவேன்.அதற்குப் பின்பு அம்மோன் புத்திரருடைய சிறையிருப்பைத் திருப்புவேன்(5,6)

ஏதோமைக் குறித்து சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது(7)

- ஏதோம் பாழாகும்(17)

தமஸ்குவைக் குறித்து(23)

- தமஸ்கு தளர்ந்து போம்(24)

கேதார், காத்சோருடைய ராஜ்யங்களைக் குறித்து(28)

- பள்ளத்தாக்கில் ஒதுங்கிப் பதுங்குங்கள், நேபுகாத்னேச்சார் உங்களுக்கு விரோதமாக உபாயங்களைச் சிந்திக்கிறான்(30)

சிதேக்கியாவின்
காலத்தில் கர்த்தரால்
எரேமியாவுக்கு
உண்டான வார்த்தைகள்
(எரே.)
(23,24,27-31,49:34-39,50,51)

Sword of the Spirit

சிதேக்கியா - கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்
(II இரா 24:17 - 20, II இரா 25 : 1-2)

சிதேக்கியாவின் நான்காம் வருஷம்

23	ஜனங்களைச் சிதறடிக்கிற மேய்ப்பர்கள்,பொய்த் தீர்க்கதரிசிகள்
24	அத்திப் பழங்களுள்ள இரண்டு கூடைகள்
27	பாபிலோன் ராஜாவின் நுகம்
28	அனனியா - பொய்த்தீர்க்கதரிசனம்
29	கர்த்தருடைய வார்த்தை சிறைப்பட்டுப்போனவர்களுக்கு ஒரு நிரூபமாக
30	யாக்கோபு இக்கட்டுக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்
31	புது உடன்படிக்கை
49:(34-39) 50	ஏலாமுக்கும்,பாபிலோனுக்கும் விரோதமாக கர்த்தரின் வார்த்தை
51	செராயா எரேமியாவின் சொற்படி புஸ்தகத்தை ஐப்பிராத்து நதியில் போட்டான்

Sword of the Spirit

23 , 24

23 :: என் ஆடுகளைக் கெடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்பர்களுக்கு (1 - 8)

- என் ஆடுகளை பராமரியாமல் அவைகளை சிதறடித்து அவைகளைத் துரத்தி விட்டீர்கள்.(2)
- உங்கள் செய்கைகளின் பொல்லாப்புக்கேற்ற தண்டனையை உங்கள் மேல் வருவிப்பேன்.(2)
- என் ஆடுகளில் மீதியாய் இருப்பவைகளை திரும்ப அவைகளின் தொழுவங்களுக்கு கொண்டு வருவேன் அப்பொழுது அவைகள் பலுகிப் பெருகும்.(3)

★ **ஒரு நீதியுள்ள கிளை . நல்ல மேய்ப்பன் நமது நீதியாய் இருக்கிற கர்த்தர்**(5,6)

தீர்க்கதரிசிகளைக் குறித்து:(9-40)

- வீண்பெருமை கொள்ளும்படி செய்கிறார்கள் (16)
- தாங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லுகிறார்கள்(16)
- என் நாமத்தை அவர்கள் மறக்கும் வழி செய்ய பார்க்கிறார்கள்.(27)

நான் விரோதி

- என் வார்த்தையை திருட்டுத்தனமாய் எடுக்கிற தீர்க்கதரிசிகளுக்கு (30)
- தங்களின் சொல்லையே வழங்கி அவர் அதை உரைத்தார் என்று சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு(31)
- தங்கள் பொய்களினாலும், தங்கள் வீம்புகளினாலும் மோசம் போக்குகிறவர்களுக்கு(32)

Sword of the Spirit

24 :: அத்திப் பழங்களுள்ள இரண்டு கூடைகள்

1. **நல்ல அத்திப்பழங்கள் -**
   கல்தேயர் தேசத்துக்குச் சிறைப்பட்டுப் போன யூதர்கள்.-

- **நன்மையுண்டாக அவர்களை அங்கிகரிப்பேன்**(5,6,7)

  6. அவர்களுக்கு நன்மையுண்டாக நான் என் கண்களை
  அவர்கள்மேல் வைத்து, அவர்களை இந்த தேசத்துக்குத்
  திரும்பி வரப்பண்ணி, அவர்களைக் கட்டுவேன், அவர்களை
  இடிக்கமாட்டேன், அவர்களை நாட்டுவேன், அவர்களைப் பிடுங்கமாட்டேன்.
  7. நான் கர்த்தர் என்று அறியும் இருதயத்தை அவர்களுக்குக் கொடுப்பேன்; அவர்கள் என்
  ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்; அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும்
  என்னிடத்திற்குத் திரும்புவார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

2. **புசிக்கத்தகாத கெட்ட அத்திபழங்கள் -**
   சிதேக்கியா,அவனுடைய பிரபுக்கள்,எருசலேமின் குடிகள்-

அவர்களுக்குத் தீமையுண்டாக நான் கொடுத்த தேசத்தில் அவர்கள் இராதபடிக்கு நிர்மூலமாகு மட்டும் அவர்களுக்குள்ளே பட்டயத்தையும் , பஞ்சத்தையும், கொள்ளை நோயையும் அனுப்புவேன்(8-10)

Sword of the Spirit
Sword of the Spirit

27 , 28

27 :: பாபிலோன் ராஜாவின் நுகம்

கர்த்தர் :-

- இந்த தேசங்களையெல்லாம் நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவின் கையிலே கொடுத்தேன்(6)
- எந்த ஜாதியாவது ,எந்த ராஜ்யமாவது... தன் கழுத்தை பாபிலோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்தாமலும் போனால் அந்த ஜாதியை நான் அவன் கையாலே நிர்மூலமாக்குமளவும், பட்டயத்தாலும்,பஞ்சத்தாலும்,கொள்ளைநோயாலும் தண்டிப்பேன்.(8)
- கீழ்ப்படுத்தி அவனை சேவிக்கிற ஜாதியை தன் தேசத்தைப் பயிரிட்டு,அதிலே குடியிருந்து தாபரிக்கப்பண்ணுவேன்(11)
- கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகள் பாபிலோனிலிருந்து திரும்ப கொண்டு வரப்படும் என்று பொய்யாய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்களுக்குச் செவி கொடாதிருங்கள்.(16)
- நான் அவைகளை விசாரிக்கும் நாள்வரைக்கும் அவைகள் பாபிலோனில் இருக்கும்.(22)

28 :: அனனியா- பொய்த்தீர்க்கதரிசனம் (1-4,10,11)

அனனியா:-

- பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு போகப்பட்ட யூதர் அனைவரையும் நான் இவ்விடத்துக்கு திரும்பிவரப்பண்ணுவேன் என்றார் என்றான் .(4)
- எரேமியா கர்த்தரின் கட்டளையின்படி உண்டு பண்ணின மரநுகத்தை உடைத்துப் போட்டான்.(10)

கர்த்தர்:-

- இருப்பு நுகத்தை இந்த எல்லா ஜாதிகளுடைய கழுத்தின் மேலும் போட்டேன்.(14)
- அனனியாவே இந்த வருஷத்திலே நீ சாவாய்.(15)

Sword of the Spirit

எரேமியா - கர்த்தருடைய தீர்க்கதரிசி // அனனியா - பொய்த் தீர்க்கதரிசி

29 :: சிறைப்பட்டுப்போனவர்களுக்கு ஒரு நிரூபம்(1-25,30-32)

எரேமியா தீர்க்கதரிசி எழுதி எருசலேமிலிருந்து எலெயாசார்,கெமரியா மூலம் நேபுகாத்நேச்சாருக்குக் கொடுக்கபட்ட நிரூபத்தின் விபரம்:

- நான் உங்களை சிறைப்பட்டு போக பண்ணின பட்டணத்தின் சமாதானத்தைத் தேடி அதற்காக கர்த்தரை விண்ணப்பம் பண்ணுங்கள் அதற்கு சமாதானம் இருக்கையில் உங்களுக்கும் சமாதானம் இருக்கும்(7)
- 70 வருடம் நிறைவேறின பின்பு நான் உங்களை சந்தித்து உங்களை இவ்விடத்திற்கு திரும்பிவர பண்ணுவேன்,(10)
- உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால் என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்.(13)

- ❑ நான் கற்பியாத பொய்யான வார்த்தையை என் நாமத்தை சொல்லி உரைத்தார்கள். - ஆகாப், சிதேக்கியா.(23,21)
- ❑ நான் அதை அறிவேன் அதற்கு நானே சாட்சி .

Sword of the Spirit

பாபிலோனிலிருந்து செமாயா எருசலேமில் இருக்கிற செப்பனியா என்னும் ஆசாரியனுக்கு எழுதின நிருபத்தை செப்பனியா எரேமியாவின் காது கேட்க வாசித்தான்.(24-29)

செமாயாவின் நிரூபம்:-(25-27)

- உங்களுக்கு தீர்க்கதரிசனம் கூறிவருகிற ஆனதோத் ஊரானாகிய எரேமியாவை நீர் கடிந்து கொள்ளாமல் போகினதென்ன?(27)

செமாயாவின் நிரூபத்திற்கு கர்த்தரின் பதில் ::

- ❑ செமாயாவையும் , அவன் சந்ததியையும் தண்டிப்பேன் ...நான் என் ஜனத்துக்கு செய்யும் நன்மையை அவன் காண்பதில்லை.(32)

Sword of the Spirit

30,31

30 :: இஸ்ரவேலையும் ,யூதாவையுங் குறித்து

கர்த்தர்:-

- இதோ நாட்கள் வரும் அப்பொழுது நான் இஸ்ரவேலும் யூதாவும் ஆகிய என் ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பி நான் அவர்கள் பிதாக்களுக்கு கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்ப வரப்பண்ணுவேன்.(3)
- உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடு இருக்கிறேன்.(11)
- நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி உன் காயங்களை ஆற்றுவேன்.(17)
- நகரம் தன் மண்மேட்டின் மேல் கட்டப்பட்டு, அரமனை முன் போல நிலைப்படும்.(18)
- அவர்கள் சபை எனக்கு முன்பாகத் திடப்படும். அவர்களை ஒடுக்கின யாவரையும் தண்டிப்பேன்.(20)
- கர்த்தருடைய பெருங்காற்று உக்கிரமாய் எழும்பி அடித்து துன்மார்க்கருடைய தலையின் மேல் மோதும் . கர்த்தர் தம்முடைய இருதயத்தின் நினைவுகளை நடப்பித்து நிறைவேற்றுமளவும் அவருடைய கோபம் தணியாது. கடைசி நாட்களில் அதை உணர்ந்து கொள்வீர்கள்.(23,24, 23:19,20)

Sword of the Spirit

31 :: புது உடன்படிக்கை

- கர்த்தர் யாக்கோபை மீட்டு அவனிலும் பலத்தவனுடைய கைக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிறார்.(11)
- நான் அவர்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றி அவர்களை தேற்றி அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களை சந்தோஷப்படுத்துவேன்.(13)
- எப்பிராயீம் என் சேஷ்டபுத்திரனாயிருக்கிறான். அவனுக்கு விரோதமாய் பேசினது முதல் அவனை நினைத்து கொண்டே இருக்கிறேன் ஆகையால் என் உள்ளம் அவனுக்காக கொதிக்கிறது.(9,20)
- இதோ நாட்கள் வரும் (மேசியாவின் நாட்கள்)அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்
- கர்த்தரை அறிந்து கொள் என்று ஒருவனும் போதிப்பதில்லை அவர்களில் சிறியவர் முதல் பெரியவர் மட்டும் எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள் நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.(34)

Sword of the Spirit

49:(34-39)50,51

49 :: ஏலாம்

- ஏலாமுடைய பிரதான வல்லமையை முறித்துப் போட்டு ,அவர்களை எல்லா திசைகளிலும் சிதறடிப்பேன் .
- என் கோபத்தின் உக்கிரமான தீங்கை அவர்கள் மேல் வரப்பண்ணுவேன் ஆனாலும் கடைசி நாட்களில் சிறையிருப்பைத் திருப்புவேன்

50 - 51(1-59):: பாபிலோன் (சர்வ பூமியின் சம்மட்டி(23))

- ❑ பாபிலோன் இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தருக்கு விரோதமாக இடும்பு செய்தது.(29)
- ❑ இது தமது ஆலயத்துக்காக கர்த்தர் வாங்கும் பழி (15,28),(51:11)
- ❑ பாபிலோனுக்கு விரோதமாக வட தேசத்தில் இருக்கும் பெரிய ஜாதிகளின் கூட்டத்தை எழுப்பி அதை வரப்பண்ணுவேன்.(9,41)
- ❑ கர்த்தரின் கோபத்தினால் அது குடியற்றதும் பெரும்பாழுமாயிருக்கும்.(13),(51:26)

பட்டயம் யார் மேல் வரும்?? வறட்சி யார் மேல் வரும்??(35-38)

51 :: 60-64 (எரேமியா செராயாவிடம்)

செராயா - சாந்தகுணமுள்ள பிரபு

- எரேமியா கர்த்தருடைய வார்த்தைகளை ஒரு புஸ்தகத்தில் எழுதி அதை செராயாவிடம் கொடுத்து, இந்த புஸ்தகத்தை வாசித்து தீர்ந்த பின்பு அதனை ஒரு கல்லை கட்டி அதை ஐப்பிராத்து நடுவில் எறிந்துவிட்டு இப்படியே பாபிலோன் முழுகிப்போகும் என்று சொல்வாயாக என்றான்

Sword of the Spirit

சிதேக்கியாவின் 9-11 வருஷங்கள்

37 (1-10)	பார்வோன் வருகிறதை அறிந்த கல்தேயர் ,எருசலேமை விட்டு நீங்கி போனார்கள்
34	கர்த்தருடைய உடன்படிக்கையை மீறுதல்
37 (11-21)	ஏரேமியா காவற்படுத்தப்பட்டான்
21	கர்த்தர் :- ஜீவ வழி,மரண வழி
32	உவமை - ஆனதோத்திலுள்ள நிலம்
33	எரேமியா காவலிலிருக்கும்போது 2 ஆம் தரம் கர்த்தரின் வார்த்தை
38	ஏரேமியாவின் மேல் குற்றச்சாட்டு,எத்தியோப்பியன் எபெத்மெலேக், சிதேக்கியாவுக்கு கொடுக்கப்படும் எச்சரிக்கை

Sword of the Spirit

37 :: (1-10) பார்வோன் வருகிறதை அறிந்த கல்தேயர் ,எருசலேமை விட்டு நீங்கி போனார்கள்

- நேபுகாத்நேச்சார் யூதா தேசத்தில் ராஜாவாக நியமித்திருந்த யோயாக்கீமின் குமாரனாகிய கோனியாவின் (யோயாக்கீன்) பட்டத்துக்கு யோசியாவின் குமாரனாகிய சிதேக்கியா (யோயாக்கீமின் சகோதரன்) வந்து அரசாண்டான்(1)
- எருசலேமை முற்றிகை போட்ட கல்தேயர் பார்வோன் எகிப்திலிருந்து புறப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டு எருசலேமை விட்டு நீங்கிப்போனார்கள்.(5)

கர்த்தருடைய வார்த்தை:-

❑ உங்களுக்கு ஒத்தாசையாகப் புறப்பட்ட பார்வோனின் சேனை எகிப்துக்குத் திரும்பிப் போகும். கல்தேயரோவென்றால் இந்த நகரத்தைப் பிடித்து,அக்கினியால் சுட்டெரிப்பார்கள்.(7-9)

Sword of the Spirit

34 :: கர்த்தருடைய உடன்படிக்கையை மீறுதல்

பாபிலோனின் சேனைகள் யூதாவின் எல்லாப் பட்டணங்களிலும் யுத்தம் பண்ணிக் கொண்டிருக்கையில்..

கர்த்தர்:-

- சிதேக்கியாவின் மரணத்தைக் குறித்து (1-6)
- ஒருவனும் யூதானாகிய தன் சகோதரனைஅடிமை கொள்ளாதபடிக்கு கர்த்தரோடு பண்ணின உடன்படிக்கையை மீறி ,கர்த்தருடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கினார்கள்.(8-16)
- என் சொல்லைக் கேளாமற் போனதினால் ,பூமியின் ராஜ்யங்களிலெலாம் அலைகிறதற்கு உங்களை ஒப்புக்கொடுப்பேன்.(17-22)
- ஒருவரும் யூதா பட்டணங்களில் குடியிராதபடிப் பாழாய்ப்போகப் பண்ணுவேன்.(22)

Sword of the Spirit

37 :: (11-21) ஏரேமியா காவற்படுத்தப்பட்டான்

- எரேமியா எருசலேமிலிருந்து ,பென்யமீன் தேசத்துக்குப் புறப்பட்டுப் போன போது,யெரியா என்பவன் அவன் கல்தேயரை சேரப் போகிறவன் என்று சொல்லி பிரபுக்களிடம் கொண்டுப் போனான்.(11-14)
- பிரபுக்கள் எரேமியாவை யோனத்தானுடைய(சம்பிரதி) வீட்டில் காவற்படுத்தினார்கள்.(15,16)
- கர்த்தருடைய வார்த்தையை அறிந்து கொள்ள சிதேக்கியா எரேமியாவை இரகசிமாய்க் கேட்டான்,
- கர்த்தருடைய வார்த்தை :- பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர்.(17)
- எரேமியா கேட்டுக்கொண்ட படி அவனை யோனத்தானின் வீட்டிற்கு அனுப்பாமல் காவற்சாலையின் முற்றத்திலே எரேமியாவைக் காக்கவும்,அப்பத்தை அவனுக்கு வாங்கிக்கொடுக்கும்படி சிதேக்கியா கட்டளையிட்டான்.(20,21)

21 : கர்த்தர் :- ஜீவ வழி,மரண வழி

Sword of the Spirit

சிதேக்கியா பஸ்கூரையும், செப்பனியாவையும் எரேமியாவினிடத்தில் அனுப்பி கர்த்தருடைய வார்த்தையை அறிந்து கொள்கிறான்.

கர்த்தர்:-

- நான் உங்கள் முன்னே ஜீவ வழியையும் மரணம் வழியையும் வைக்கிறேன் .(8)
- இந்த நகரத்தில் தரித்திருக்கிறவன் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும் ,கொள்ளை நோயாலும் சாவான்.(9)
- கவசமாய் புறப்பட்டுப் போய் விடுகிற வினோ பிழைப்பான்.(9)
- என் முகத்தை இந்த நகரத்துக்கு விரோதமாய் நன்மை-தீமை கைவைத்தேன் (10)
- நான் உங்கள் கிரியைகளின் பலனுக்கு தக்கதாய் உங்களை விசாரிப்பேன் (14)

Sword of the Spirit

32 :: ஆனதோத்திலுள்ள நிலம்

ஆனதோத்திலுள்ள நிலத்தை அனாமெயேலிடத்தில் வாங்கியதற்கு சாட்சியாக முத்திரைப் போடப்பட்ட கிரயப்பத்திரத்தையும்,திறந்திருக்கிற பிரதிபத்திரமுமாகிய சாசனங்களை பாரூக்கிடம் கொடுத்து அனேக நாள் இருக்கும்படி ஒரு மண்பாண்டாத்தில் வை என்றான்.(1-15)

எரேமியாவின் விண்ணப்பம்(16 - 25)

- இஸ்ரவேலராகிய உம்முடைய ஜனம் உமது சத்தத்துக்குச் செவிகொடாமல்..... நீர் அவர்களுக்குக் கற்பித்ததொன்றையும் செய்யாமலும் போனார்கள்.ஆதலால் இந்த தீங்கையெல்லாம் அவர்களுக்கு நேரிடப்பண்ணினீர்.(23)
- இந்த நகரம் கல்தேயரின் கையிலே கொடுக்கப்படுகிறதாயிருந்தும் ; நீ உனக்கு ஒரு நிலத்தை விலைக்கிரயமாகக்கொண்டு,அதற்குச் சாட்சிகளை வையென்று சொன்னீரே(25)

கர்த்தர் :- (26-44)

இதோ,நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?

- ஜனங்களின் பாவங்கள் (29 - 35)
- நேபுகாத்னேச்சார் கையில் ஒப்புக்கொடுக்கிறார்கள்(28)

(32 :36- எரே.33)மீட்டெடுக்கிற கிருபை

- அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்,நான் அவர்கள் தேவனாயிருப்பேன்.(38)
- நீதியின் கிளை (மேசியா - இயேசு கிறிஸ்து) (33:14-18)
- உடன்படிக்கையின் தேவன்(33:19 -26)

Sword of the Spirit

38 :: எரேமியா கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னதைக் கேட்டு ஜனங்களால் குற்றஞ்சாட்டப்படுதல்.(1-6)

செப்பத்தியா,பஸ்கூர்(மல்கியாவின் குமாரன்),கெதலியா(பஸ்கூரின் குமாரன்),யூகால்,- எரேமியாவின் மேல் குற்றச்சாட்டு



- இவன் இந்த ஜனத்தின் க்ஷேமத்தைக் தேடாமல் அவர்கள் கேட்டையே
- தேடுகிறான்.(4)
- மல்கியாவின் உளையாயிருந்த துரவிலே எரேமியாவைப்
- போட்டார்கள்.(6)

எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக்(பிரதானி)

- எரேமியாவிற்காக ராஜாவினிடத்தில் பேசி , எரேமியாவைத் துரவிலிருந்து எடுத்துவிட்டான்.(8 - 13)

சிதேக்கியாவுக்கு கொடுக்கப்படும் எச்சரிக்கை (17 - 23)

- பாபிலோன் ராஜாவின் பிரபுக்கள் அண்டைக்கு புறப்பட்டுப் போவீரானால் உம்முடைய ஆத்துமா உயிரோடு இருக்கும் இந்த பட்டணம் அக்கினியால் சித்தரிக்கப்படுவது இல்லை.(17)
- நான் புறப்படுகிறதில்லை எனில் நீரும் அவர்கள் கைக்கு தப்பிப் போகாமல் பாபிலோன் ராஜாவின் கையினால் பிடிபட்டு, இந்த நகரம் அக்கினியால் சுட்டெரிக்கப்பட காரணமாய் இருப்பீர் .(21,23)

எரேமியா எருசலேம் பிடிபடுகிற நாள் மட்டும் காவற் சாலையின் முற்றத்தில் இருந்தான், எருசலேம் பிடிபட்டு போனபின்பும் அங்கேயே இருந்தான்.(28)

Sword of the Spirit

முற்றுகைக்குப் பின்	
39	நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவை பாபிலோனுக்கு கொண்டு போனான்.
40	பாபிலோன் ராஜா கெதலியாவை தேசத்தின் மேல் அதிகாரியாக்கினான்.
41	கெதலியா கொல்லப்பட்டான் .இஸ்மவேல் // யோகனான்
42	கர்த்தர் : - எகிப்துக்குப் போகாதிருங்கள்
43	எகிப்துக்குப் போனார்கள்
44	கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்ய துணிகரம்
52	சிதேக்கியாவின் மரணம், யோயாக்கீனின் உயர்வு

Word of the Spirit

39 :: நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவை பாபிலோனுக்கு கொண்டு போனான்.

- சிதேக்கியா 9 ஆம் வருஷம் , 10 ஆம் மாதம் - பாபிலோன் முற்றுகை.(1)
- 11 ஆம் வருஷம் ,4 ஆம் மாதம் - நகரத்து மதிலில் திறப்புக் கண்டது.(2)
- பாபிலோன் ராஜா ரிப்லாவிலே சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டினான் . சிதேக்கியாவின் கண்களைக் கெடுத்து ,அவனை பாபிலோனுக்கு கொண்டு போக அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குகளைப் போட்டான்.(7)
- நகரத்தில் தங்கியிருந்த ஜனங்கள்,தன் பட்சத்தில் ஓடிவந்து விட்டவர்கள்,மீதியான மற்ற ஜனங்கள் >>காவற் சேனாபதி நேபுசராதான் பாபிலோனுக்குச் சிறைகளாகக் கொண்டு போனான்(9)
- நேபுகாத்நேச்சார் எரேமியாவைக் குறித்து நேபுசராதானிடம்:- அவன் உன்னோடே சொல்லுகிறபடியெல்லாம் அவனை நடத்து.(11,12)
- எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக்கைக் குறித்து கர்த்தர் :-நீ என்னை நம்பினபடியால் உன் பிராணன் உனக்குக் கிடைத்தக் கொள்ளைப் பொருளைப் போல இருக்கும்.(16-18)
- எரேமியா அகிக்காமின் மகனான கெதலியாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டான்,(14)

40 :: பாபிலோன் ராஜா கெதலியாவை தேசத்தின் மேல் அதிகாரியாக்கினான்.

- காவற் சேனாதிபதி எரேமியாவுக்கு வழிச்செலவையும்,வெகுமதியையும் கொடுத்து அவனை அனுப்பிவிட்டான். (5)
- எல்லா யூதரும் தாங்கள் துரத்துண்ட எல்லா இடங்களிலுமிருந்து மிஸ்பாவுக்கு கெதலியாவினிடத்தில் வந்து திராட்சரசத்தையும்,பழங்களையும் மிகுதியாய்ச் சேர்த்து வைத்தர்கள்.(12)
- கெதலியாவைக் கொன்றுபோட இஸ்மவேல் அனுப்பட்டிருக்கிறான் என்று யோகனான் சொன்னதை கெதலியா நம்பவில்லை.(13-16)

Sword of the Spirit

41 :: இஸ்மவேல் // யோகனான்

- இஸ்மவேலும் அவனோடு 10 பேரும் சேர்ந்து கெதலியாவை பட்டயத்தால் வெட்டினார்கள்.(2)
- இஸ்மவேல் மிஸ்பாவில் இருக்கிற மீதியான ஜனத்தை எல்லாம் சிறைப்படுத்திக் கொண்டு அம்மோன் புத்திரர் பட்சத்தில் போகப் புறப்பட்டான்,(10)
- இதைக் கேட்ட யோகனான் அவனோடு இருந்த எல்லா இராணுவ சேர்வைகாரோடும் யுத்தம் பண்ண போனார்கள். இஸ்மவேல் சிறைப்பிடித்துக் கொண்டு போன ஜனங்கள் பின்னிட்டு திரும்பினான் இடத்தில் வந்து விட்டார்கள்.(11-14)
- கெதலியாவை இஸ்மவேல் வெட்டிப் போட்டதினிமித்தம் கல்தேயருக்கு பயந்தபடியினால் தாங்கள் எகிப்துக்கு போகப் புறப்பட்டார்கள்.(16-18)

Sword of the Spirit

42 ,43 :: கீழ்ப்படிந்து நடப்போம் என்று சொல்லியும் கீழ்ப்படியாமல் போனார்கள்

- யோகனானும் , யெசனியாவும் , சகல ஜனங்களும் எரேமியாவினிடத்தில் வந்து கர்த்தருடைய வார்த்தையை அறிந்து கொள்ளும்படி ஜெபம் பண்ண வேண்டிக்கொண்டார்கள்.(1-3)
- நன்மையானாலும் தீமையானாலும் கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள்.(5,6)

கர்த்தர் :-

- ❑ நான் உங்களுக்கு செய்து இருக்கிறதுக்கு மனஸ்தாபப்பட்டு நீங்கள் பயப்பட வேண்டாம் நான் உங்களுடனே இருந்து உங்களுக்கு இரக்கம் செய்வேன் .(10 - 12)
- ❑ நாங்கள் இந்த தேசத்திலே இருக்கிறதில்லை, எகிப்து தேசத்துக்கு போய் இருப்போம் என்று சொல்வீர்களாகில், பட்டயம் எகிப்து தேசத்திலே உங்களை பிடிக்கும் .பஞ்சம் எகிப்திலே உங்களை தொடர்ந்து வரும், அங்கே சாவீர்கள்.(13 - 19)

அவர்களோ செவிகொடாமல் போனார்கள்.(20 -22)(எரே. 43)

Sword of the Spirit

43 :: கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிகொடாமல் எகிப்துக்குப் போனார்கள்

- அகங்காரிகளான எல்லா மனுஷரும் எரேமியாவை நோக்கி எகிப்திலே தங்கும்படிக்கு அங்கே போகாதிருங்கள் என்று சொல்ல , எங்கள் தேவனாகிய கர்த்தர் உன்னை எங்களிடத்துக்கு அனுப்பவில்லை.(2)
- எரேமியாவையும், பாரூக்கையும்,சகல ஆத்துமாக்களையும், யோகனானும், சகல இராணுவச் சேர்வைக்காரரும் கூட்டிக் கொண்டு, கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிகொடாதபடியினாலே,எகிப்துக்கு போக எத்தனித்து , தக்பானேஸ் மட்டும் போய் சேர்ந்தார்கள்.(4-7)

கர்த்தர் : -

- ❑ பெரிய கற்களை எடுத்து சூளையின் களி மண்ணிலே புதைத்து ஜனங்களை நோக்கி.நான் புதைப்பித்த இந்த கற்களின் மேல் பாபிலோனுடைய சிங்காசனத்தை வைப்பேன்.(9,10)
- ❑ அவன் வந்து எகிப்து தேசத்தை அழிப்பான்.(11) எகிப்தின் தேவர்களுடைய கோவில்களைச் அக்கினியால் சுட்டுப்போடுவானென்று சொல் .(12,13)



Sword of the Spirit

44 ::கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்ய துணிகரம்

கர்த்தர் :- (1-14)

- ❑ எனக்கு கோபமூட்டுகிற பெரிய பொல்லாப்பை உங்கள் ஆத்துமாக்களுக்கு விரோதமாக செய்து, நீங்கள் பூமியின் சகல ஜாதிகளுக்குள்ளும் சாபமும் நிந்தையுமாயிருப்பதற்காகவும் நீங்கள் தங்கியிருக்க வந்த எகிப்து தேசத்திலே அந்நிய தேவர்களுக்கு தூபம் காட்டுவானேன்.(3,7,8)
- ❑ நான் எருசலேமைத் தண்டித்தபடி எகிப்து தேசத்தில் குடியிருக்கிறவர்களையும் பட்டயத்தாலும் , பஞ்சத்தாலும் , கொள்ளை நோயினாலும் தண்டிப்பேன்.(13)
- ❑ தப்பிபோகிறவர்களாகிய மற்றவர்களையொழிய அவர்களில் ஒருவரும் யூதா தேசத்துக்குத் திரும்புவதில்லை.(14)

ஸ்திரீ ளும் புருஷருமாகிய சகல ஜனங்கள் :-

- நாங்கள் வானராகினிக்கு தூபங்காட்டாமலும் அவளுக்குப் பானபலிகளை வார்க்காமலும் போனது முதற்கொண்டு எல்லாம் எங்களுக்கு குறைவுபட்டது. பட்டையத்தாலும், பஞ்சத்தாலும் அழிந்துபோனோம்.(16 - 19)

கர்த்தர் :- (24-30)

- ❑ எகிப்து தேசம் எங்கும் ஒரு யூதா மனுஷன் வாயிலும் இனி என் நாமம் வழங்கப்படுவதில்லை .(26)
- ❑ இதோ நான் அவர்கள்மேல் நன்மைக்கல்ல தீமைக்கே ஜாக்கிரதையாக இருப்பேன் .(27)
- ❑ ஆனாலும் அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து யூதா தேசத்துக்குக் கொஞ்சமாய் திரும்புவார்கள் .(28)
- ❑ அக்காலத்திலேயே தங்களுடைய வார்த்தையோ என் வார்த்தையோ யாருடைய வார்த்தை மெய்ப்படும் என்று அறிவார்கள்.(28)
- ❑ பார்வோன் ஒப்பிராவை அவனுடைய சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுப்பேன்.(30)

Sword of the Spirit

52 :: சிதேக்கியாவின் மரணம், யோயாக்கீனின் உயர்வு

- சிதேக்கியா பொல்லாப்பானதைச் செய்தான்
- கர்த்தர் சிதேக்கியாவையும் , யூதாவையும் பாபிலோனியர் கைகளில் ஒப்புக்கொடுத்தார்.
- எருசலேமை சுற்றியிருந்த அலங்கங்களை இடித்துப் போட்டார்கள்.(14)

➢ நேபுகாத்னேச்சார் சிறைப்பிடித்துப்போன ஜனங்களின் தொகை.(28,29,30)

➔ 7 ஆம் வருஷத்தில் - 3023 யூதர்
➔ 18 ஆம் வருஷத்தில் - 832 பேர்கள்
➔ 23 ஆம் வருஷம் - 745 பேர்கள்

➢ மொத்தம் >> 4600

யோயாக்கீனுடைய சிறையிருப்பின் 37 ஆம் வருஷத்தில் ஏவில் மெரொதாக் என்னும் பாபிலோனிய ராஜா, யோயாக்கீனின் சிறையிருப்பு வஸ்திரங்களை மாற்றி ,அவன் உயிரோடிடிருந்த சகல நாளும் தன் சமூகத்தில் நித்தம் போஜனம் பண்ணும்படி செய்தான்.(31 - 34)

Sword of the Spirit

- இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்தவுடன் தம்முடைய ஜனங்களுடன் செய்ய விரும்பிய புது உடன்படிக்கையின் தெளிவான பார்வையை எரேமியா புத்தகம் நமக்கு வழங்குகிறது.
- இந்த புது உடன்படிக்கை தம்முடைய ஜனங்களை மறுசீரமைப்பதற்கான வழிமுறையாக இருக்கும், ஏனெனில் அவர் தம்முடைய நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைப்பார், அதை கற்பலகைகளிலிலல்லாமல் அவர்கள் இருதயத்தில் எழுதுவார்.
- ஒரு ஆலயம் போன்ற ஒரு நிலையான இருப்பிடத்தின் மூலம் கர்த்தர் நமது உறவை வளர்ப்பதற்குப் பதிலாக, அவருடைய ஜனங்கள் அவரை நேரடியாக அறிந்துகொள்வார்கள் என்று எரேமியா மூலம் வாக்குறுதி அளித்தார்.
- அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்து,அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன் என்றார்;
(எரேமியா 31: 31-34; எபிரெயர் 8: 6).

எபிரெயர் 8 :6. இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்.

Sword of the Spirit

	எரேமியா	இயேசு
பிறப்பதற்கு முன் கர்த்தருடைய திட்டத்தை நிறைவேற்ற அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.	1:5	மத்.1:21
தேசங்களுக்கான தீர்க்கதரிசி	1:10, 46:1-51:64	மத்.28:18-20
ஆலயம் கள்ளற்குகை ஆயிற்றோ?? என்று பிதாவின் கோபத்தை வெளிப்படுத்தினர்	7:11	மத்.21:13; மாற்.11:17; லூக்.19:46
எருசலேம், மற்றும் தேவாலயத்தின் அழிவை முன்னறிவித்தார்கள்	7:1-15; 25:1-38; 26:1-15	மத்.24:2; லூக்.19:41-44; லூக்.21:20-24
எருசலேமுக்காக கண்ணீர் வடித்தனர்	9:1; 14:17	லூக்.19:41-44
புது உடன்படிக்கை	31:31-34	மத். 26:27,26; மாற்.14:24,25 லூக்.20:20-22
மரணத்துக்குப் பாத்திரன் என்று ஜனங்கள் தீர்மானித்தனர்	26:1-19;38:1-13	மத்.26:65-66

கர்ததருடைய
வார்த்தை
ஆமென்
ஆவியின்
பட்டயம்
Sword of the Spirit